TAMIL

# The Spoken Word

by

WILLIAM MARRION BRANHAM

# பில்லி பால் பிரான்ஹாம் அவர்களின் பாம்பேயை குறித்த நினைவுகள்

ஏழாம் தூதன்

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

"உரைக்கப்பட்ட வார்த்தையே மூல வித்து"

# பில்லி பால் பிரான்ஹாம் அவர்களின் பாம்பேயை குறித்த நினைவுகள்

1954-ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில், கோடைகால இடைவேளைக்குப் பிறகு, என் மாமனாராகிய ஹவார்டு (என் தகப்பனாரின் சகோதரன்) அவர்கள் மிகவும் வியாதியாயிருக்கிறார் என்று என் தகப்பனார் என்னை அழைத்து பேசும் போது, நான் டெக்ஸாஸிலுள்ள வாக்ஸாஹாச்சியில் உள்ள வேதாகமப் பள்ளிக்குத் திரும்பியிருந்தேன். இன்னும் ஒரு சில நாட்களில் கடல் கடந்து நடக்கும் கூட்டங்களுக்கு அவர்கள் போக வேண்டுமென்று கால அட்டவணை தயாரிக்கப்பட்டிருந்தது, ஆனால் இப்பொழுதோ என் மாமனார் ஹவார்டு அவர்கள் சுகவீனமாக இருப்பதால், அவர்களால் போக முடியாது.

வேதாகம பள்ளி செமஸ்டர் வகுப்பு தொடங்கின போதிலும், தகப்பனார் என்னிடம் கடல் கடந்து நடக்கும் கூட்டங்களுக்கு என் மாமனாருக்குப் பதிலாக நீ வருகிறாயா என்று கேட்டார். மேலும் அவர், நியூயார்க் பட்டணத்தில் ஆராதனைகளை தொடங்கி விட்டு, அதற்குப் பிறகு லிஸ்பன், ரோம், கெய்ரோ மற்றும் பாம்பேக்கு செல்வதாகவும் கூறினார்.

நான் உடனடியாக, “வருகிறேன்!” என்றேன். அதற்குப் பிறகு நான், அந்த வேதாகமபள்ளியின் தலைவரிடம் சென்று, “நான் இன்னும் ஆறு வாரங்களில் திரும்பி வந்து விடுவேன்” என்று கூறினேன். ஆனால் உண்மையில் நான் அங்கு திரும்பி செல்லவேயில்லை. அந்த நேரமுதற்கொண்டு, நான் என் தகப்பனாருடன் ஒவ்வொரு கூட்டத்திலும் கலந்துகொள்கிறேன்.

நியூயார்க்கில் நடந்த ஆராதனைகள் செப்டம்பர் மாதம் 2-ம் தேதியோடு முடிந்துவிட்டன, அடுத்த நாளே ஐரோப்பாவிற்கு சென்றோம். நாங்கள் செப்டம்பர் 18-ந் தேதி பாம்பேயை

அடைவதற்கு முன், நான் கெய்ரோ, எகிப்தில் என்னுடைய 19-வது பிறந்த நாளைக் கொண்டாடினேன். ஜெர்மனியைச் சேர்ந்த செல்வாக்குமிக்க பாரன் வான் பிளாம்பர்க் அவர்கள் தான் முழு கூட்டத்தையும் ஒழுங்குபடுத்துவதில் பொறுப்பேற்றிருந்தார். நாங்கள் செல்லும் வழியில் ஒவ்வொரு இடத்திலும், அவர் தன்னுடைய அரசியலில் சம்பந்தப்பட்ட உயர்பதவியிலுள்ள வர்களோடும் அரசியல் மேதைகளோடும் கலந்துரையாடல்களை நடத்தும்படி ஒழுங்குப்பண்ணியிருந்தார். இந்தியாவில் நடந்த கூட்டத்தில் இந்திய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அந்த ஆராதனைகளில் கலந்துகொண்டு ஜனங்களை வாழ்த்தினார்.

நாங்கள் பாம்பேயின் மேயரால் அதிகாரப்பூர்வமாக வரவேற்பு அளிக்கப்பட்டோம்.



*(சகோதரன் பிரான்ஹாம் 1954-ம் வருஷம் செப்டம்பர் மாதத்தில் பாம்பேயில் உள்ள பரிசுத்த பவுலில் இந்திய தேசிய சபையில் பேசியபோது எடுத்த படம்.)*

“நான் அந்த இடம் முழுவதும் நோக்கிப்பார்த்து, அவர்களுடைய வித்தியாசமான மதங்களை குறிப்பிட்டு காட்டும்படியான அவர்களுடைய வித்தியாசமான, வினோதமான ஆடைகளை கண்டேன். மேலும் நான், “ஓ இயேசுவே, நீர் இங்கே இருந்திருந்தால், நீர் என்ன செய்திருப்பீர்?” என்று எண்ணினேன்.

## இந்திய பயண அறிக்கை 57-0126 B

நாங்கள் விமானத்திலிருந்து இறங்கிய போது, எங்களை வாழ்த்தி வரவேற்கும்படி பெருங்கூட்டமான ஜனங்கள் வந்திருந்தனர். நான் என் தகப்பனாரின் பின்னால் நெருக்கமாக நடந்து சென்றேன், அவர் முதன் முறையாக இந்திய மண்ணில் கால் பதித்தபோது, அவர், “தகப்பனே, நான் உம்முடைய பிரதிநிதியாக உம்முடைய நாமத்தில் வந்திருக்கிறேன். நீர் யாரிடம் என்னை அனுப்பினீரோ அவர்கள் ஒவ்வொருவரையும் நான் உரிமைகோருகிறேன்” என்று கூறுவதை நான் கேட்டேன்.

விமான நிலையத்திலிருந்து நாங்கள் உடனடியாக ஒரு பெரிய உணவு விடுதிக்கு அழைத்து செல்லப்பட்டோம். கூட்டத்திற்கான செலவுகளை ஏற்றுக்கொண்டுள்ள அனைத்திந்திய தேசிய கூட்டு சபைகளிலிருந்து ஒரு வரவேற்பளிக்கும் குழு அங்கே காத்துக்கொண்டிருந்தது. சிறிய மலர்களைக்கொண்ட மலர் செண்டுகளை (bouquets) எங்களுக்கு கொடுத்தனர்.

அடுத்த நாள், நாங்கள் ஒருவகையான கோயிலுக்கு அழைத்து செல்லப்பட்டோம், அங்கே பாம்பேயின் அனேக வெவ்வேறான விசுவாசங்களைக் கொண்ட புரோகிதர்கள் கூடியிருந்தனர். அந்த மனிதர்களில் அனேகர் தங்களுடைய மதங்களைக் குறித்து பேசினர். மேலும் அது ஜனங்களுக்கும் சமுதாயத்திற்கும் முக்கியமானதாக இருந்தது.

தகப்பனார் அவர்களிடம், “பெருந்தகையோரே, நீங்கள் பேசுவதைக் கேட்க நான் உங்களைப் பாராட்டுகிறேன். ஆனால் நீங்கள்

இன்றிரவு ஆராதனைக்கு வந்து தேவன் நிரூபித்துக் காட்டுவதை காண நான் உங்களை அழைக்க விரும்புகிறேன்'' என்றார்.





அன்று மாலையில், சுகமளிக்கும் ஆராதனையின் போது தகப்பனார் என்னிடம் திரும்பி, கூட்டத்தினரில் அதிகமாக வியாதிப்பட்டிருக்கும் ஒரு நபரை கண்டுபிடித்து மேடையின் மேலே அவரை அழைத்து வரும்படி என்னிடம் கேட்டுக்கொண்டார். அதைப் போன்று சம்பவிப்பது அதுவே முதல்தடவை, நான் அந்த நபரை காண்பேன் என்ற நிச்சயம் எனக்கிருக்கவில்லை. ஆனால் நான் கூட்டத்தினருக்குள் நடந்த போது, ஒரு குருடான மனிதனை கண்டேன். நான் அவனுடைய கரத்தைப் பிடித்து அவனை மேடைக்கு வழிநடத்தினேன். அந்த மனிதன் சுகமடைந்ததாக என் தகப்பனார் ஏற்கனவே ஒரு தரிசனத்தை கண்டிருப்பதை நான் அறியவில்லை.

நாங்கள் பாம்பேயில் தாஜ்மஹால் என்று அழைக்கப்படும் ஒரு உணவு விடுதியில் தங்கியிருந்தோம். ஒரு காரை கொண்டிருந்த ஒரு ஓட்டுநர் தான் நாங்கள் அந்தப் பட்டணத்தில் இருந்த முழு நேரமும் எங்களுக்காக பணத்தை செலவழித்தார். நாங்கள் வீட்டுக்குத் திரும்ப ஆயத்தமான போது, என் தகப்பனார் அந்த ஓட்டுநரை அழைத்து வரும்படி என்னிடம் கேட்டுக்கொண்டார், ஏனெனில் அவர் அந்த ஓட்டுநரிடம் பேச விரும்பினார்.

நான் அந்த ஓட்டுநரை அழைத்து வந்த போது, முதலாவதாக தகப்பனார், அவர் மரியாதை செலுத்தினதற்காகவும், குறிப்பாக ஒவ்வொரு நாள் மாலையிலும் எங்களை ஆராதனைக்கு அழைத்துச்செல்ல சரியான நேரத்தில் வந்ததற்காகவும் நன்றி கூறினார். அவர் எப்பொழுதும் அமைதியாயிருந்து, எந்த வழியிலும் தகப்பனாரை தொந்தரவுபடுத்தவில்லை. அப்போது தகப்பனார் அவரிடம், "நாங்கள் திரும்பிப் போகும் நேரத்தில் நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார்.

அந்த மனிதன் தகப்பனாரிடம் தன்னுடைய நண்பரின் மகள் ஊனமுற்று ஒரு சக்கர நாற்காலியில் இருப்பதாகவும், அவர் அவளுக்காக ஜெபிக்க முடியுமா? என்றும் கேட்டார். தகப்பனார், "நிச்சயமாக" என்றார். சரியாக அப்பொழுதே நாங்கள்

அவருடைய காரில் ஏறி அந்த குடும்பம் வசிக்கும் இடத்திற்கு பயணம் செய்தோம்.

நாங்கள் அவ்விடத்தை அடைந்த போது, அந்த சிறு பெண் தன்னுடைய சக்கர நாற்காலியில் உட்கார்ந்தவாறு, ஒரு கால்பந்தாட்ட பந்தை தன்னுடைய சில சிநேகிதிகள் விளையாடுவதை கவனித்துக்கொண்டே, தரையில் முன்னும் பின்னுமாக சக்கர நாற்காலியை உருட்டிக் கொண்டிருந்தாள். தகப்பனார் அந்த பந்தை எடுத்துக்கொண்டு அவளிடம் நடந்து சென்று, பந்து விளையாட உனக்கு விருப்பமா என்று கேட்டார்.

அவள், “என்னால் பந்து விளையாட முடியாது, ஏனெனில் நான் ஊனமுற்றிருக்கிறேன்'' என்று அவரிடம் கூறினாள்.

“ஒவ்வொரு இரவும் ஆராதனையில் ஜனங்கள் சுகமடைவதை நீ கண்டதுண்டா?'' என்று கேட்டார்.

அவள், “நான் கண்டதில்லை, ஆனால் அதைக் குறித்து கேள்விபட்டிருக்கிறேன்'' என்று அவரிடம் கூறினாள்.

“சகோதரன் பிரான்ஹாம் உனக்காக ஜெபித்தால், இயேசு உன்னை சுகமாக்குவார் என்று நீ விசுவாசிக்கிறாயா?'' என்று அவர் கேட்டார்.

“ஆம், நான் விசுவாசிக்கிறேன்'' என்று அவள் பதிலளித்தாள். அவர், -இயேசுவின் நாமத்தில் சுகமடைவாயாக'' என்று கூறியவாறே அந்த பந்தை அவளைவிட்டு அப்பால் எறிந்து தரையில் உருள செய்தார்.

அந்த சிறு பெண் உடனே அவளுடைய சக்கர நாற்காலியை விட்டு எழும்பி அந்த பந்திற்கு பின்னே ஓடினாள்.

நாங்கள் வீட்டிற்குத் திரும்பிய பிறகு, தகப்பனார் ஜனங்களிடம், “ஆப்பிரிக்காவிற்கு என்னுடைய முதல் பிரயாணத்தை நான் செய்தபோது, நான் கண்ட கண்ட காரியங்களை விட்டு வெளிவர முடியவில்லை என்று நினைத்தேன். ஆனால் இந்தியா

என்னிடத்தில் அதிக பாதிப்பை உண்டாக்கி விட்டது" என்றார். ஜனங்களுடைய உபத்திரவங்களும், அவர்களை கட்டி வைக்க முயற்சிக்கும் விக்கிரக ஆராதனையான இருளும் அவருக்கு முன்பாக எப்பொழுதும் இருந்துகொண்டிருந்தன.

இந்திய தேசத்தில் தெரிந்து கொள்ளப்பட்டவர்களிடையே இன்று பரிசுத்த ஆவியானவரின் கிரியையை காண்பதற்கு என் தகப்பனார் எவ்வளவாக மகிழ்ச்சியடைகிறார்.

**விசுவாச தூதன்**

1955-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் வெளியான விசுவாச தூதன் பத்திரிகையில் சகோதரன் பிரான்ஹாமின் இந்திய பயணத்தைக் குறித்து எழுதப்பட்டிருந்தவை:



**இந்தியாவில் சகோதரன் பிரான்ஹாம்**

**சாத்தானின் சேனைகளுக்கு தேவனின் சவால்**

I இராஜா. 18-ம் அதிகாரம் 21-ம் வசனத்தில், இன்றிரவு நம்முடைய பிரசங்கத்திற்கான அடிப்படையாக நாம் வாசிக்கலாம்.

*அப்பொழுது எலியா சகல ஜனத்தண்டைக்கும் வந்து: நீங்கள் எந்தமட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக்குந்தி நடப்பீர்கள்; கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள்; பாகால் தெய்வமானால் அவனைப் பின்பற்றுங்கள் என்றான், ஜனங்கள் பிரதியுத்திரமாக அவனுக்கு ஒன்றும் சொல்லவில்லை.''*

கர்த்தர் தம்முடைய ஆசீர்வாதங்களை இதனோடு கூட்டுவாராக.

நம்முடைய பாடமானது கடல் கடந்து நடத்தப்பட்ட இந்திய பிரயாணத்தைக் குறித்ததாகும்.

அது தீர்க்கதரிசியான எலியாவின் நாட்களில் சம்பவித்ததாகும். இஸ்ரவேலர் அனைவரும் யெகோவாவை ஆராதிப்பதை விட்டு விலகி வேறு தேவர்களுக்குப் பின்னால் சென்று விட்டனர். ஆயினும் அங்கே ஒரு தீர்க்கதரிசி இருந்தான். தேவனை நேசிப்பவன் தான் ஒருவன் மாத்திரமே என அவன் நினைத்தான், ஆனால் பாகாலுக்கு முழங்காற்படியிடாத 7000 பேரை கர்த்தர் வைத்திருந்தார்.

இராஜாவாகிய ஆகாபு அவிசுவாசியான ஒரு ஸ்திரீயை விவாகம் பண்ணியிருந்தான். அவள் தேசத்தில் விக்கிரக ஆராதனையைக் கொண்டு வந்தாள். வாலிப கிறிஸ்தவ ஜனங்கள் ஒரு அவிசுவாசியை விவாகம் செய்யும் போது இந்த இடத்தில் தான் ஒரு தவறை செய்கின்றனர். அது கிரியை செய்கிறதில்லை. யேசபேல் ஸ்திரியானவள் பாகால் என்னும் விக்கிரகத்தை ஆராதிக்கும்படி, உண்மையான தேவனை ஆராதிப்பதிலிருந்து இஸ்ரவேலை விலக்கி வைத்தாள், மேலும் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளைக் கொன்று போட்டாள். ஆனால் தேவனுடைய தீர்க்கதரிசியாகிய எலியாவோ தேவனுடைய வார்த்தையைக் கொண்டிருந்து, தன்னை மறைத்துக்கொண்டான்.

## சாத்தானின் சேனைகளுக்கு எலியாவின் சவால்

எலியா பாகாலின் நானூற்றைம்பது தீர்க்கதரிசிகளையும், இஸ்ரவேல் புத்திரர் எல்லாரையும் அழைத்தனுப்பினது என்ன ஒரு

குறிப்பிடத்தக்க காரியம்! எலியா அவர்களிடம், "நீங்கள் எந்தமட்டும் இரண்டு நினைவுகளால் குந்திகுந்தி நடப்பீர்கள்; கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள்; பாகால் தெய்வமானால் அவனைப் பின்பற்றுங்கள் என்றான்... அக்கினியினால் உத்தரவு அருளும் தெய்வமே தெய்வம்" என்றான்.

அங்கே இருப்பது போன்று அவ்வளவு அதிகமாக விக்கிரக ஆராதனை உலகத்தில் இருக்கும் என்று இப்பொழுது வரை நான் புரிந்துகொள்ளவில்லை. ஏறக்குறைய 23 வருஷங்களுக்கு முன்னால், நான் ஜெபர்ஸன்வில்லில் உள்ள ஒரு பாப்டிஸ்ட் சபையில் என்னுடைய முதல் செய்தியை பிரசங்கித்த போது, உலகத்தில் அவ்வளவு விக்கிரக ஆராதனை இருக்கும் என்று நான் புரிந்துகொள்ளவில்லை. இங்கே அமெரிக்காவில் அது வித்தியாசமானது, ஆனால் கிறிஸ்துவின் நாமத்தையே கேட்டிராத லட்சக்கணக்கான ஜனங்கள் அங்கே உள்ளனர். அது ஒரு பரிதாபகரமான காரியம். ஆப்பிரிக்காவிற்கு நான் பிரயாணம் செய்த என் முதல் பயணத்தில் நான் கண்ட காரியங்களை விட்டு என்னால் வெளியே வரமுடியாது என்று நினைத்தேன், ஆனால் இந்தியா என் மீது பெரிய பாதிப்பை உண்டாக்கி விட்டது. நான் வீட்டிற்கு வந்த போது சிறிது நாட்கள் தனியே செல்ல வேண்டியதாயிருந்தது. நீங்கள் அதை உங்களுடைய இருதயத்தை விட்டு எடுத்துப்போட வேண்டியதாயுள்ளது. அல்லது உங்களால் உயிரோடு வாழ முடியாது.

## நியூயார்க் பட்டணத்தை விட்டு திரும்புதல்

நாங்கள் நியூயார்க் பட்டணத்தை விட்டு திரும்பினோம், நாங்கள் அங்கு மதர் பிரௌனுடனும் மற்றவர்களுடனும் ஒரு அற்புதமான கூட்டத்தைக் கொண்டிருந்தோம். உங்களில் அனேகர் அந்த அருமையான ஜனங்களை அறிவீர்கள். கூட்டங்கள் பரிசுத்த நிக்கோவாஸ் பொது விளையாட்டு அரங்கத்தில் நடந்தன. அங்கே நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் மகத்தான வல்லமையின் அசைவை நாங்கள் கண்டோம். நாங்கள் விமானத்தில் புறப்பட்டு

லிஸ்பன், போர்சுகலில் தரையிறங்கினோம். அங்கு நாங்கள் ஆளுநரையும், பிரபலமானவர்களில் அனேகரையும் சந்தித்தோம், மேலும் நாங்கள் ஒரு ஆராதனையைக் கொண்டிருந்தோம். கர்த்தராகிய இயேசு அப்படிப்பட்ட வல்லமையான ஆச்சரியமான அற்புதங்களை நடப்பித்து எங்களிடம் வந்தார். அந்த சூழ்நிலையை கட்டுப்படுத்த வழியே இல்லாதிருந்தது. அவர் குருடரின் கண்களைத்திறந்து, செவிடர்களையும் ஊமையர்களையும் சுகமாக்கினார். தேச முழுவதிலுமிருந்து ஜனங்கள் கூட்டங்களுக்கு வந்திருந்தனர். அங்கேயுள்ள மிஷனரிகளுடன் இங்குள்ள (சிகாகோவில் உள்ள) பிலதெல்பியா சபையானது சில தொடர்புகளைக் கொண்டுள்ளது.

அவர்கள் வேறொரு விசுவாசத்தைக் கொண்டிருந்தபோதிலும், அங்குள்ள ஜனங்களில் அனேகர் சபைக்கு செல்வதில்லை, ஆனால் அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் சுகமாக்கும் வல்லமையின் கிரியையை கண்ட போது, அவர்கள் கவர்ந்திழுக்கப்பட்டனர். ஜனங்களுடைய கவனத்தை கவரும்படி, கர்த்தராகிய இயேசு இதை பயன்படுத்துகிறார் என்று நான் நினைக்கிறேன். மூன்று கூட்டங்களுக்கு மாத்திரமே எங்களுக்கு சமயமிருந்தது. எல்லா ஜனங்களையும் கொண்டிருப்பதற்கு எங்களுக்கு இடமில்லாதிருந்தது. மலைப்பக்கங்களிலும் ஜனங்கள் நிரம்பியிருந்தனர். ஆனால் அதற்குப் பிறகு நாங்கள் புறப்படவேண்டியிருந்தது.

## <u>இத்தாலியின் ரோமில்</u>

அதன்பிறகு நாங்கள் ரோமாபுரியில் இருந்தோம், அங்கு நான் பரிசுத்த பேதுருவின் ஆலயத்தில் இருக்கும் வாய்ப்பைப் பெற்றேன். நாங்கள் வத்திக்கான் சிட்டியில், நிலத்தடி கல்லறையில் பரி.பவுல் மரித்த இடத்தில் இருந்தோம். நான் அதிக நேரம் அழுதேன். பரிசுத்த பவுல் அந்த பழைய சிறைச்சாலையில் குளிரிலும் புழுக்கத்திலும் கிடந்து, சபைகளுக்கும் சகோதரர்களுக்கும் எழுதின நிருபங்களைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருந்தேன். அது எந்த

மனிதனின் இருதயத்தையும் நொறுக்கும். அந்த ஆதிகால பரிசுத்தவான்களைக் குறித்து சிந்தித்தேன்.

நாங்கள் வெவ்வேறான அதிகாரிகளை சந்தித்தோம், மேலும் அந்த தேசத்தின் முக்கிய மதசம்பந்தமான ஸ்தாபனத்தின் முதன்மையான மனிதர்களுடனான கூட்டத்தினரைக் கொண்டிருந்தோம், ஆனால் நான் தளர்வடைந்த நிலையில் இருந்தேன். கர்த்தராகிய இயேசுவில் விசுவாசம் கொண்ட இயேசு கிறிஸ்துவின் பெயரை கூப்பிடுகிற எந்த மனிதனையும் நான் பாராட்டுகிறேன். அவன் எந்த மார்க்கத்தை விசுவாசிக்கிறவனானாலும் எனக்கு அக்கறையில்லை. விக்கிரங்களிலிருந்து ஜனங்களை விடுவித்து, ஜீவிக்கும் தேவனிடத்தில் ஜனங்களைக் கொண்டு வரும் மிஷனரி போராட்டங்களில் மற்ற மிஷனரிகள் எந்த சபையை சார்ந்தவர்கள் என்பதில் நாங்கள் அதிக கவனம் செலுத்துவதில்லை. அதுவே முக்கியமான காரியம். அவர்களுடைய மத ஸ்தாபனங்களின் தலைவர்களுக்கு கொடுக்க வேண்டிய மரியாதையை கொடுக்க வேண்டும் என்பதை உணரவில்லை. ஒரு பிஷப்புக்கோ, டாக்டர் பட்டம் பெற்றவருக்கோ அல்லது அவர் என்ன பட்டத்தைப் பெற்றிருந்தாலும் நான் அதை கனம் பண்ணுவேன், ஆனால் ஆராதனை என்று வரும் போது நான் இயேசு கிறிஸ்துவுக்கே அதை செலுத்துவேன்.

நாங்கள் அங்கே ஒரு ஆராதனையைக் கொண்டிருந்தோம், அந்த இத்தாலிய ஜனங்கள் தேவனுக்காக கொண்டிருந்த பசியை நீங்கள் பார்த்திருந்தால் ஆச்சரியப்படுவீர்கள். நாங்கள் எங்களுடைய கூட்டத்தை இரகசியமாக செய்ய வேண்டியிருந்தது, ஏனெனில் பட்டணத்தில் அந்த கூட்டம் நிலத்தடி கல்லறை போன்ற ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருக்க வேண்டியிருந்தது.

நாங்கள் அந்த இரவில் அங்கு சென்றோம், அந்த தாழ்மையான ஜனங்களை கண்டது என்ன ஒரு காட்சி! சென்ற யுத்தத்தின் போது அவர்களின் தலைவரான முசோலினியினால் ஏமாற்றப்பட்டு யுத்தத்தில் தோல்வியடைந்தனர், இருப்பினும் நம்முடைய

பரலோக பிதாவானவர் தம்முடைய அன்பையும் வல்லமையையும் அவர்களுக்கு முன்பாக காண்பிக்க துவங்கினார், ஏன், அங்கே அப்போஸ்தலர்களில் காலத்தின் சபை இருந்தது, என்ற எண்ணத்தை அது உங்களில் ஏற்படுத்தி விடும். என்னுடைய ஜீலியத்திலேயே எப்பொழுதும் கேள்விபட்டதிலேயே அது கடினமாக இருந்தது. அவர்கள் சந்தோஷத்திற்காக அழுது சத்தமிட்டனர், மேலும் தங்களுடைய கரங்களை மேலே உயர்த்தி தெருவில் நடந்தவாறே தேவனை துதித்து அழுது சத்தமிட்டனர். இரண்டு நாட்களுக்குப் பிறகு, மீண்டும் நாங்கள் எங்கள் பாதையில் இருந்தோம்.

## இந்தியாவில்

முதலாவதாக என்னை பாதித்த ஒரு காரியம் என்னவெனில் ஆகாரத்திற்காக பசியுள்ள ஜனங்களை வீதியில் கண்டேன். விமான கட்டணத்தைத் தவிர்த்து என்னிடம் ஏதாவது பணம் இருக்கிறதா என பார்த்து, மீதி பணத்தை, நான் தெருவில் சென்று அவர்களுக்கு கொடுக்கத் தொடங்கினேன். அப்போது என்னை அங்கிருந்து கொண்டு செல்ல இராணுவம் வரவேண்டியிருந்தது. எனவே நான் ஜன்னலில் சென்று பணத்தை அவர்களிடம் வீசி எறிந்தேன். என்னே, ஏதோவொன்றை சாப்பிடும்படி ஜனங்கள் வெளியே கூச்சலிட்டு முறையிட்டுக் கொண்டிருந்தனர்.

ஏன், இங்கே சில காலத்திற்கு முன்னால், நான் சகோதரன் ராஸ்முஸனுடன் நடந்து சென்று கொண்டிருந்தேன். அப்போது அங்கே ஏழ்மையான ஒருமனிதன் கந்தையான கிழிந்த மேலாடையை அணிந்து வந்தான். அவன் ஒரு குப்பைத் தொட்டியைச் சென்றடைந்து, அங்கே சாப்பிட ஏதாவது கிடைக்குமா? என்று பார்த்தான். பிறகு அவன் தன்னுடைய சட்டைப் பையிலிருந்து ஒரு கரண்டியை எடுத்து அந்தக் குப்பைத் தொட்டியிலிருந்து சாப்பிடத் தொடங்கினான். அதைப் பார்த்த நான் சகோதரன் ராஸ்முஸனிடம், தேவனுடைய கிருபை மாத்திரம் இல்லாமலிருந்தால் நீங்களும் நானும் இந்த மனிதனைப் போன்றே இருந்திருப்போம் என்றேன். அது சரியே.

அந்த மனிதன் ஒரு ஏழையான மனிதன் என்று நான் எண்ணினேன், ஆனால் நான் என்னுடைய மனதை மாற்றிக்கொண்டேன். நான் நியூயார்க்கில் உள்ள பாவெரி வழியாக போனேன், அப்போது அங்குள்ள சூழ்நிலையைக் கண்டேன். இங்கே சிகாகோவில் உள்ள ஸ்கிட் ரோவில் நான் இருந்து அங்குள்ள ஜனங்களைக் கண்டிருக்கிறேன். மனிதர்கள் கடைவாயில்களிலும் (door way) வீதிகளிலும் நின்று கொண்டிருந்தார்கள் என்று அறிவதே கடினமாயிருந்தது. சகோதரன் போஸ் அதனூடாக என்னை அழைத்துச் சென்றார். அந்த ஏழையான ஜனங்களை நான் நினைத்துக் கொண்டிருந்தேன்.

இப்பொழுது அவர்களெல்லாரும் ஏழையான ஜனங்களல்ல என்று நான் புரிந்து கொண்டேன். அவர்கள் அங்கிருப்பதற்கு ஒரு காரணம் என்னவெனில் அவர்களில் அவர்களுடைய முக்கியத்துவமாகவோ இருக்கலாம். அவர்கள் அங்கிருக்க வேண்டியதில்லை. நமக்கு இங்கே அனேக உதவி செய்யும் அமைப்புகள் உள்ளன. அவர்களுக்கு உதவி தேவையெனில் அவர்களுக்கு உதவ இரட்சணிய சேனை, செஞ்சிலுவை சங்கங்கள் மற்றும் பல அமைப்புகள் உள்ளன. ஆனால் இந்தியாவில் அது வித்தியாசமானது.

## <u>உதவி செய்ய யாருமில்லை</u>

அங்கே இந்தியாவில் சாப்பாட்டிற்காக அலையும் மனிதர்களை உங்களால் காண முடியும், அவர்களுக்கு உதவிபுரியும் எந்த அமைப்புகளும் அங்கு கிடையாது. அங்கே அப்படிப்பட்ட எதுவுமேயில்லை. அவர்கள் வீதியினூடாக நடந்து சென்று, அங்கங்கே விழுந்து கிடப்பதை உங்களால் காண முடியும். நான் அங்குள்ள ஒரு சில தெருக்களில் நடந்து சென்ற போது, அந்த காட்சிகளை காணாதவாறு என் கண்களை மூடிக்கொண்டேன். ஜனங்கள் வீதிகளில் எரிப்பதற்காக வெட்டப்பட்ட மரக்கட்டையைப் (Cord wood) போன்று விழுந்து கிடந்தனர். நான் கண்ட அதை ஒப்பிடும் போது, இங்கேயுள்ள

ஸ்கிட் ரோவானது ஒரு பரதீசைப் போன்றது தான். அது அங்குள்ள பெரிய பட்டணங்களில் ஒன்றாகும். அப்படியெனில் மற்ற இடங்களில் அது எப்படிப்பட்ட நிலையில் இருக்கும் என்று வியப்படைகிறேன். சிகாகோவிலுள்ள நம்மைப்போன்று அந்த ஜனங்களும் மனிதர்களே. இயேசு கிறிஸ்து நமக்காக மரித்தது போன்று அவர்களுக்காகவும் மரித்தாரே.

அனேக வித்தியாசமான காரியங்களை நான் இந்தியாவில் கண்டேன். மனிதர்கள் தெருக்களில் தங்களுடைய மாந்திரீகம் செய்து போவதை நாங்கள் கண்டோம். சில மனிதர்கள் தங்களுடைய கரங்களிலுள்ள விரல்களில் நகங்களை வளரச்செய்திருந்தனர். அவர்கள் வருடக் கணக்காக தங்களுடைய கரங்களை திறக்காமல் மூடிக்கொண்டு தங்களுடைய ஆத்துமாவின் சமாதானத்தை தேடும்படி முயற்சித்துக் கொண்டிருந்தனர். அவர்களில் சிலர் இருப்பு ஆணிகளிலும் மற்றவைகளிலும் படுத்தவாறு சமாதானத்தைத் தேடும்படி முயற்சித்துக் கொண்டிருந்தனர். இங்கே சிகாகோவிலும் மற்ற இடங்களிலும், ஜனங்கள் சமாதானத்தைத் தேடும்படி வீதியின் குறுக்காக நடக்க கூட மாட்டார்கள்.

சில ஜனங்கள் கடினமாக உழைப்பதை நாங்கள் கண்டோம், அவர்கள் ஏறக்குறைய 12 சென்ட்களுக்காக நாள் முழுவதும் கடினமாக உழைக்கிறார்கள். அவர்களுக்கு கிடைப்பது அவ்வளவுதான். அது பரிதாபகரமானது. இப்பொழுது, அந்த கடினமான பக்கத்தை உங்களுக்கு சொல்லிக்கொண்டிருந்தேன், அது உண்மை இப்பொழுது மற்ற பக்கத்தை குறித்து சொல்லப் போகிறேன்.

## பதினேழு வித்தியாசமான மார்க்கங்கள்

நான் அங்கு இருந்த இரண்டாம் நாள், பதினேழு வித்தியாசமான மார்க்கங்களின் பிரதிநிதிகளால் வரவேற்பு அளிக்கப்பட்டேன். அவர்களில் ஒருவர் கூட கிறிஸ்தவரல்ல. நாங்கள் ஒரு ஆலயத்திற்குச் சென்றோம். அது ஒரு துறவி மடத்தைப் போன்ற ஏதோவொன்றாக காட்சியளித்தது. அவர்கள்

இந்த இடத்தில் எந்த மயிரையும் கொண்டிருக்க முடியவில்லை. அவர்கள் அதை வெட்டுவதேயில்லை. எனவே அவர்கள் தங்கள் விரல்களால் அதை வாருகிறார்கள், எனவே அவர்கள் முகங்கள் தோலின் வீக்கங்களால் மூடியிருக்கும். அவர்கள் எதையுமே கொல்லுவதில்லை.

அவர்கள் தரையை கூட்டிப்பெருக்க ஒருவகையான துடைப்பத்தைக் கொண்டுள்ளனர். அவர்கள் ஒரு எறும்பைக் கூட கொல்ல பயப்படுகின்றனர். அது ஒருவேளை மரித்த தங்களுடைய தாய் அல்லது மற்ற ஏதோ உறவினராக இருக்கலாம் என்றும் அந்த ஒரு காரியம் அவர்களுடைய ஜீவனையே இழக்க காரணமாய் இருக்கலாம் என்றும் நினைக்கின்றனர்.

பிறகு புனிதமான வெள்ளை நிற பசுவை வணங்குபவர்களும் அங்குண்டு. நான் இந்த மனிதர்களுடன் பிற்பகல் முழுவதும் செலவழித்தேன். பிறகு நான் அவர்கள் அனைவரையும் அன்றிரவு நடக்கும் கூட்டத்திற்கு வரும்படி அழைத்தேன். அமருவதற்கு ஒரு இடத்தை தருவதாக வாக்களித்தேன், அவர்களும் வந்திருந்தனர்.

அங்கே அனேக ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூட்டத்திற்கு வந்திருந்தனர். கடைசியாக நாங்கள் மேடையை அடைந்து ஜெப வரிசையை துவங்கினோம். நான் அனேகருக்காக ஜெபித்தேன், பிறகு முழுவதும் குருடான ஒரு மனிதனை அவர்கள் கொண்டு வந்தனர். நீங்கள் விரும்பினால் உங்கள் மிஷனரிகள் இந்த காரியங்களை உறுதிபடுத்த முடியும். நான் இந்த மனிதனிடம் திரும்புவதற்கு முன்னால் மற்றொரு மனிதரிடம் பேசிக் கொண்டிருந்தேன், பிறகு நான் ஒரு தரிசனத்தைக் கண்டேன். அந்த தரிசனத்தில் அந்த குருடான மனிதர் அப்போது இருந்ததை விட வயதானவராக காணப்பட்டார். அவர் தம்முடைய கண் பார்வையை கொண்டவராக தெருவில் நடந்து செல்வதை நான் கண்டேன். நான் தரிசனத்தில் கண்டவாறே சரியாக அது சம்பவிக்கும் என்பதை நான் அறிந்து கொண்டேன். அதை

வெளிப்படையாக கூறுவதற்கான நேரம் அதுவாக எனக்கு தென்பட்டது.

இப்பொழுதே அந்த வேளையாக இருந்தது. உண்மையான கிறிஸ்தவத்தை எந்த சமயத்திலும் பரீட்சையில் கொண்டு வர பயப்பட வேண்டாம், ஏனெனில் தேவன் தம்முடைய வார்த்தைக்கு கடமைப்பட்டவராயிருக்கிறார். அவர் தம்முடைய வார்த்தையை எனக்கு காத்துக்கொள்ளவில்லையென்றால்,அவர் தேவனல்ல. வேதாகமானது உண்மையாயிருக்க வேண்டும் அல்லது தவறாயிருக்க வேண்டும், அதன் ஒவ்வொரு வார்த்தையும் சத்தியம் என்று நான் அறிவேன். இது ஜீவிக்கும் தேவனுடைய கலப்படமற்ற வார்த்தை என்றும் எந்த நிலைமையிலும் அவர் தம்முடைய வார்த்தையை நிரூபிக்கிறார் என்றும் நான் விசுவாசிக்கிறேன். எனவே நாம் வயதான எலியாவைப் போல, "ஏன் இரண்டு நினைவுகளால் குந்திக் குந்தி நடக்கிறீர்கள். கர்த்தர் தெய்வமானால் அவரை சேவியுங்கள்'' என்று கூற முடியும்.

நான் ஆப்பிரிக்காவில் சம்பவித்ததாக கூறிய அதைப்போன்றே மீண்டும் சம்பவித்தது. ஒரே வித்தியாசமான காரியம் என்னவெனில் தேவன் அந்த மனிதனுடைய கண்களை அப்போதே திறப்பார் என்று விசுவாசித்து இதை விசுவாசத்தின் மூலம் கொண்டு வர வேண்டியதாயிருந்தது. அது பிறகு சம்பவிக்கும் என்பது எனக்குத் தெரியும், ஆனால் அது அப்போதே சம்பவிக்கும் என்று நான் விசுவாசிக்க வேண்டியதாயிருந்தது. ஆப்பிரிக்காவில் நடந்த கூட்டத்தில் நான் அந்த சுகமாதல் உடனடியாக நடப்பதாக கண்டேன். ஆனால் இந்த தரிசனத்தில் நான் அந்த குருடான மனிதனை சுகமடைந்தவனாக வயதானவனாக கண்டேன், எனவே நான் அது அப்போதே சம்பவிக்கும் என்று விசுவாசிக்க வேண்டியதாயிருந்தது. அப்பொழுது அங்கே ஒன்றரை அல்லது இரண்டு இலட்சம் ஜனங்கள் இருந்து என்ன சம்பவிக்கப்போகிறது என்று கவனித்துக் கொண்டிருந்தனர்.

## எல்லா மார்க்கத்தாருக்கும் சவால்

நான், "இவ்வுலகத்தின் மார்க்கங்களைச் சேர்ந்த கண்ணியமானவர்களே..." என்றேன். இப்பொழுது அவர்கள் என்னுடைய சகோதரர்கள் அல்ல என்பதை நான் அறிவேன். அவர்கள் கிறிஸ்தவத்திற்கு எதிராக இருந்தனர், அவர்களுக்கு அதில் நம்பிக்கை கிடையாது. அவர்கள் தேவனை விசுவாசிக்கின்றனர், ஆனால் இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்பதில் அவர்களுக்கு விசுவாசம் கிடையாது.

நான், "நீங்கள் இந்த பிற்பகலில் பிரபலம் வாய்ந்த உங்களுடைய ஒரு ஆலயத்தில் பல மணி நேரமாக எனக்கு வரவேற்பளித்தீர்கள். அப்போது உங்களுடைய தேவர்களைக் குறித்தும் அவர்கள் என்ன செய்துள்ளனர் என்பதைக் குறித்தும் உங்களுடைய மார்க்கங்களைக் குறித்தும் என்னிடம் கூறினீர்கள். இப்பொழுது இந்த மனிதன் இங்கே குருடானவனாக நின்று கொண்டிருக்கிறான். அவனை இதற்கு முன் என் ஜீவியத்தில் கண்டதில்லை. நான் அவனுடைய பாஷையில் கூட பேச முடியவில்லை, ஆனால் ஒரு மொழிபெயர்ப்பாளர் மூலமாகவே பேச வேண்டியிருக்கிறது. புதிய ஏற்பாடு என்ன கூறுகிறது என்பதை உங்களில் அனேகர் அறிவீர்கள். இயேசு கிறிஸ்து தம்மை ஒரு சுகமளிப்பவராக உரிமைகோரவில்லை. பிதாவானவர் அவருக்கு காண்பிப்பதையே அவர் செய்வதாக உரிமை கோரினார். பரி.யோவான் 5:19. பெதஸ்தா குளத்தருகில் எல்லா ஜனங்களும் அவரிடம் கேள்வி எழுப்பின போது, அவர், "பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி, வேறொன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார்; அவர் எவைகளைச் செய்கிறாரோ, அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார்" என்றார்.

ஜனங்களிடமிருந்து இயேசுவை கட்டுப்படுத்த பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் இயேசுவுக்கு இருந்தனர். அவர்கள் ஒருநாள் சிறுபிள்ளைகள் இயேசுவிடம் வராமல் தடுக்க முயற்சித்தனர். இயேசுவோ, "சிறுபிள்ளைகளை என்னிடம் வருவதற்கு

இடங்கொடுங்கள், அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்" என்றார். இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். அவர் மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்து விட்டார் என்று கிறிஸ்தவர்கள் என்ற முறையில் நாங்கள் விசுவாசிக்கிறோம்.

நாங்கள் எங்களிலே வல்லமை உண்டென்று விசுவாசிப்பது கிடையாது. நாங்கள் கிருபையால் இரட்சிக்கப்பட்ட பாவிகள் என்று உரிமைகோருகிறோம். எங்களில் நன்மையானது எதுவுமில்லை, ஆனால் நாங்கள் ஆராதிப்பவர் சர்வவல்லமையுள்ள, மாறாத ஒருவர் என்றும் தவறாதவர் என்றும், பரலோகத்தின் தேவன் என்றும் சிருஷ்டிகர் என்றும் நாங்கள் விசுவாசிக்கிறோம். அவர் தம்முடைய குமாரனை அனுப்பி, அவர் மரித்து மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்து இப்பொழுது பிதாவாகிய தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்துகொண்டு, இன்று பூமியில் பரிசுத்த ஆவியாக இருந்து, இயேசு மீண்டும் வருவது வரை தம்முடைய கிரியைகளை நடப்பித்து வருகிறார்.

"அவர் செய்த காரியங்களையே அவர் சொன்னார். நாங்களும் அதையே செய்வோம். வார்த்தை எழுதப்பட்ட விதமாகவே அதை விசுவாசிக்க வேண்டுமென்று மாத்திரம் நான் அறிவேன். அது தவறுவதில்லை, அது தவறுவதே கிடையாது, ஏனெனில் அது தவற முடியாது."

## <u>இந்த மனிதனுக்காக உங்களால் என்ன செய்ய முடியும்?</u>

பிறகு நான் இந்த வெவ்வேறு மார்க்கங்களின் பிரதிநிதிகளிடம், "உங்களால் இந்த மனிதனுக்காக என்ன செய்ய முடியும்?" என்று கேட்டேன். நான் அந்த மனிதனுடைய பெயரை வெளிப்பாட்டின் மூலம், அவர்களிடமும் அவனிடமும் கூறினேன். மேலும் நான் அவனிடம், அவன் வசிக்குமிடத்தையும், அவன் ஒரு விவாகமான மனிதன் என்றும் அவனுக்கு இரண்டு பிள்ளைகள் உண்டு என்றும் அவன் ஒரு சூரியனை ஆராதிப்பவன் என்றும் கூறினேன். சூரியனை ஆராதிப்பவர்கள் சூரியன் உதிக்கும் போது அதையும் மற்றவைகளையும்

## எல்லா மார்க்கத்தாருக்கும் சவால்

நான், "இவ்வுலகத்தின் மார்க்கங்களைச் சேர்ந்த கண்ணியமானவர்களே..." என்றேன். இப்பொழுது அவர்கள் என்னுடைய சகோதரர்கள் அல்ல என்பதை நான் அறிவேன். அவர்கள் கிறிஸ்தவத்திற்கு எதிராக இருந்தனர், அவர்களுக்கு அதில் நம்பிக்கை கிடையாது. அவர்கள் தேவனை விசுவாசிக்கின்றனர், ஆனால் இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்பதில் அவர்களுக்கு விசுவாசம் கிடையாது.

நான், "நீங்கள் இந்த பிற்பகலில் பிரபலம் வாய்ந்த உங்களுடைய ஒரு ஆலயத்தில் பல மணி நேரமாக எனக்கு வரவேற்பளித்தீர்கள். அப்போது உங்களுடைய தேவர்களைக் குறித்தும் அவர்கள் என்ன செய்துள்ளனர் என்பதைக் குறித்தும் உங்களுடைய மார்க்கங்களைக் குறித்தும் என்னிடம் கூறினீர்கள். இப்பொழுது இந்த மனிதன் இங்கே குருடானவனாக நின்று கொண்டிருக்கிறான். அவனை இதற்கு முன் என் ஜீவியத்தில் கண்டதில்லை. நான் அவனுடைய பாஷையில் கூட பேச முடியவில்லை, ஆனால் ஒரு மொழிபெயர்ப்பாளர் மூலமாகவே பேச வேண்டியிருக்கிறது. புதிய ஏற்பாடு என்ன கூறுகிறது என்பதை உங்களில் அனேகர் அறிவீர்கள். இயேசு கிறிஸ்து தம்மை ஒரு சுகமளிப்பவராக உரிமைகோரவில்லை. பிதாவானவர் அவருக்கு காண்பிப்பதையே அவர் செய்வதாக உரிமை கோரினார். பரி.யோவான் 5:19. பெதஸ்தா குளத்தருகில் எல்லா ஜனங்களும் அவரிடம் கேள்வி எழுப்பின போது, அவர், "பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி, வேறொன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார்; அவர் எவைகளைச் செய்கிறாரோ, அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார்" என்றார்.

ஜனங்களிடமிருந்து இயேசுவை கட்டுப்படுத்த பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் இயேசுவுக்கு இருந்தனர். அவர்கள் ஒருநாள் சிறுபிள்ளைகள் இயேசுவிடம் வராமல் தடுக்க முயற்சித்தனர். இயேசுவோ, "சிறுபிள்ளைகளை என்னிடம் வருவதற்கு

விசுவாசிப்பேன். ஏனெனில் மனிதனுடன் ஈடுபட அதில் ஏதோ ஒன்றுள்ளது.'' இப்பொழுது தேவன் ஒரு தரிசனத்தில் எனக்கு அதை காண்பித்து நான் அதை மிகச்சரியாக அறியாமல் நான் அங்கே எழுந்து நின்று அந்த சவாலை செய்திருந்தால், நான் அந்த மேடையிலேயே தரித்திருந்திருக்க மாட்டேன். ஆனால் தேவன் அதை செய்யப் போகிறார் என்பதை தரிசனத்தின் மூலமாக நான் அறிந்திருந்தேன். அது அப்போது, -கர்த்தர் உரைகிறதாவது'' என்பதாக உள்ளது.

மனிதனில் மூன்று அடிப்படை கூறுகள் (elements) உள்ளன. முதலாவது நிலையானது மனுஷீகத்தன்மை (humanistic), பொதுவான காரியங்கள். உதாரணமாக, ஒரு நபர் வியாதிப்பட்டிருப்பததைக் கண்டு, அவர் சுகமடைந்துவிடுவார் என நம்புதல். அடுத்த நிலையானது தெய்வீக வெளிப்பாடு, அது விசுவாசமானது உங்கள் இருதயத்தில் உருவாகும் போது அது நம்பிக்கையை விட உயர்வானது. அது சம்பவிக்கப் போகிறது என்பது உங்களுக்கு தெரியும். மூன்றாவது தரிசனம், அது "கர்த்தர் உரைக்கிறதாவது'' என்பதாக உள்ளது. தரிசனம் தவறினதை நான் கண்டதேயில்லை, அது சம்பவிக்கும் என்று அவர் கூறும்போது, அது சம்பவித்தே தீரும்.

## இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்தார் என்பதன் அத்தாட்சி

இந்த குருடான மனிதன் நான் கூறினவை சரியென்று ஒப்புக்கொண்டான்; அவனுடைய பெயர் என்னவென்று நான் சொன்னதையும், அவன் விவாகமானவன் என்றும் அவனுக்கு ஒரு மனைவியும் இரண்டு பிள்ளைகளும் உண்டு என்றும் அவர் சூரியனை ஆராதிக்கும் ஒருவர் என்றும் அவர் அனேக வருடங்களாக குருடான நிலையில் இருப்பதாகவும் கூறினதை ஒப்புக்கொண்டார். பிறகு நான், "இந்த மனிதனுடைய கண்கள் குருடான நிலையில் உள்ளதா என்பதை சோதித்துப் பார்க்க விரும்பும் மருத்துவர்கள் யாராவது இங்கிருந்தால், அப்படியே

மேலே வந்து அவனுடைய கண்களை பரிசோதித்துப் பாருங்கள்'' என்றேன். அங்கே மருத்துவர்கள் இருந்தார்கள் என்பதை நான் அறிந்திருந்தேன். அங்கே வந்திருந்த அனேகர் அந்த மனிதனையும் அவன் பிச்சையெடுத்துக் கொண்டிருந்ததையும் அறிந்திருந்தனர். அவன் அங்கே நின்றுகொண்டிருந்தான்.

நான், "உங்கள் மார்க்க சடங்குகள் சரியாக இருந்து, உங்களுடைய தேவன் உண்மையான தேவனாக இருந்தால், நீங்கள் மேலே வந்து இந்த மனிதனுக்கு அவனுடைய பார்வையை மீண்டும் கொடுங்கள்'' என்றேன். ஒருவரும் அசையவில்லை. நான் சிறிது நேரம் காத்திருந்தேன். யாருமே அசையவில்லை. நான், "என்ன காரியம். நீங்கள் இன்று என்னிடம் உங்களது மார்க்கம் எவ்வளவு மகத்தானது என்றும் அதில் சில, கிறிஸ்தவமானது எப்பொழுதாவது தொடங்குவதற்கு முன்னமே மேதிய பெர்சிய அரசுகளுக்கு முன்னமே உருவானதாக கூறினீர்கள். தேவன் உங்கள் பக்கம் இருந்தால், இந்த மனிதனுக்காக நீங்கள் ஏதோவொன்றை செய்யுங்கள் பார்க்கலாம்.''

இயேசு கிறிஸ்து அவனுடைய ஆத்துமாவை மட்டும் இரட்சிப்பவரல்ல, அவனுடைய பார்வையையும் அவர் அவனுக்கு திரும்ப கொடுக்க முடியும்.'' நான் அந்த மனிதனிடம், -இயேசு கிறிஸ்து உமக்கு திரும்ப பார்வையை கொடுப்பாரானால், உம்முடைய மீதியுள்ள வாழ்நாட்களில் அவரை சேவிப்பதாக வாக்குகொடுப்பீர்களா?'' என்றேன்.

அவர் மொழிபெயர்ப்பாளர் மூலமாக பதிலளித்தார். -இயேசு கிறிஸ்து எனக்குப் பார்வையை கொடுப்பாரானால், என் ஜீவிய கால முழுவதும் அவரைத் தவிர வேறு யாரையும் ஆராதிக்க மாட்டேன்'' என்று பதிலளித்தார்.

**வெளிப்படையான சவால்**

பிறகு நான் அந்த மிகப்பெரும் கூட்டத்தார் அனைவரிடமும், "நான் ஒரு வஞ்சகனாக இங்கே இருக்கவில்லை. நான் கிறிஸ்தவத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தவும், இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த வல்லமையில் அவரை பிரதிநிதித்துவப்படுத்தவும் இங்கே மேலே வந்திருக்கிறேன். நான் எந்த ஸ்தாபன சபையையும் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. இயேசு கிறிஸ்து இந்த குருடான மனிதனுக்கு இன்றிரவு பார்வையை திரும்பக் கொடுப்பாரானால், உங்களில் எத்தனைபேர் அவரை சேவிப்பீர்கள்?'' என்று கேட்டேன். மொழிபெயர்ப்பாளர் இதைக் கூறினபோது, அவர்களெல்லாருடைய கரங்களும் உயர்த்தப் பட்டன, ஆயிரமாயிரக்கணக்கானவர்கள்.

காலம் சமீபமாயிற்று "அந்த மனிதனை மேலே கொண்டு வாருங்கள்.'' அவர்கள் அவனை மேலே கொண்டு வந்தனர். எல்லாரும் கவனித்துக்கொண்டே மவுனமாயிருந்தனர். இதைச் செய்ய என்னில் எதுவும் கிடையாது, உங்களிலும் யாருமில்லை அல்லது இதைச் செய்யக்கூடியவர் யாருமில்லை, ஆனால் தேவன் தாம் அதைச் செய்யப்போவதாக சொல்லியிருக்கிறார், நான் அவரை விசுவாசிக்கிறேன். அவன் அப்போதே பார்வையை பெறுவான் என்று நான் விசுவாசிக்க வேண்டியதாயிருந்தது, தரிசனத்திலோ அவன் வயதானவனாக காணப்பட்டான், ஆனால் தேவனை தம்முடைய வார்த்தையில் கொண்டு வர பயப்பட வேண்டாம்.

நான் அந்த மனிதனிடம் சென்றேன். முதலாவது நான் ஜெபித்து, தேவனிடம், "என்னுடைய எந்த பாவத்தையும் மன்னியும், நான் தவறான எதையாவது சொல்லியிருந்தால் என்னை மன்னியும், இப்பொழுது நான் வந்து உம்முடைய வார்த்தையின் அடிப்படையில் உம்மை சந்திக்கிறேன்'' என்று வேண்டினேன்.

நான் அவனுடைய கண்களின் மீது என்னுடைய கரங்களை வைத்திருந்தேன், நான் ஜெபத்தை முடித்த போது என் கைகளை

வெளியே எடுத்தேன். அந்த மனிதன் தன்னுடைய கண்களைத் திறந்தபோது சந்தோஷத்தால் கூக்குரலிட்டான். ஜனங்கள் மேடை மேல் நெருக்கிக் கொண்டு வந்து என் உடைகளை கிழித்துப்போடுவார்கள் என நான் நினைத்தேன். என்ன ஒரு பெருங்கூச்சல்!

## தேவன் தம்முடைய வார்த்தையை நிரூபிக்கிறார்.

### <u>சுவிசேஷத்தின் நிமித்தமாக</u>

பாம்பே கூட்டங்களுக்கு பண உதவி செய்த அனைத்திந்திய தேசிய சபைகளின் கூட்டமைப்பானது சகோதரன் பின்ஹாமிடம் இரண்டு வழக்கத்திற்கு மாறான வேண்டுகோள்களை வைத்தன.

முதலாவது, அவர்கள் சகோதரன் பிரன்ஹாம் மற்றும் அந்த ஆராதனைகளில் பேசிய மற்றொருவருமான சகோதரன் எர்ன் பாக்ஸ்டர் ஆகிய இருவரின் ஊழியக்காரர்களின் உடைகளுடன் அவர்களிருவரின் புகைப்படத்தை விரும்பினர். அந்தப் புகைப்படங்கள் பிரசுரிக்கப்பட்டு பட்டணத்திலுள்ள சபைகளுக்கு அனுப்பப்படும்.

இரண்டாவது வேண்டுகோள் என்னவெனில், அவர்கள் கூட்டம் தொடங்குவதற்கு முன்னால் பொதுவான கூட்டத்தில் மதப்போதகர்களுக்கான வெள்ளை நிற கழுத்துப்பட்டையுடன் கூடிய ஆடை அணிந்து பேச வேண்டும். இது உள்நாட்டு மதத் தலைவர்களின் கண்களில் சகோதரன் பிரான்ஹாமின் ஊழியத்தைக் குறித்து அதிக உடன்பாட்டை உண்டாக்க உதவிபுரிவதாக காணப்படும்.

சகோதரன் பிரான்ஹாம் இந்த இரண்டு வேண்டுகோளுக்கும் எந்த எதிர்ப்பும் காட்டவில்லை. அதற்கு மாறாக, முதலாம் சபைக்கால செய்தியாளனாகிய பவுலின் உதாரணத்தைப் பின்பற்றினார்.

S.டேனியல் சம்பத் குமார்
எண் 147, திருநிலை காலனி,
விச்சூர் போஸ்ட்,
சென்னை–600 103




*for books contact :*

**S.DANIEL SAMPATH KUMAR**

*No. 147, Thirunilai colony ,*
*vichoor post , chennai - 600 103*

*E-Mail : sdanielsampathkumar@gmail.com*
*Website : danielendtimebooksministry.org*
*Phone No :* 99419 74213 , 96001 71260